பற்றாக்குறையைப் போக்குவதற்காக சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அந்த ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை அப்படியே கடைப்பிடித்ததன் காரணமாக சற்று காலதாமதம் ஏற்பட்டது. இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணி முடிவுற்று, ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, மின் கம்பங்கள் தயாரிப்பதற்கு வேண்டிய ஆணைகள் வழங்கப்பட்டு, மின் கம்பங்கள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. மிக விரைவிலேயே, அநேகமாக இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்திற்குள்ளாகவே மின் கம்பங்கள் வழங்கப்படுவதில் பிரச்சினையே இருக்காது என்ற அளவிற்கு இப்போது மின் கம்பங்கள் சப்ளை அதிகரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இனிமேல் இந்தப் பிரச்சினை எழாமல் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***16948—திரு. சு. ரவி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, முருங்கை ஊராட்சியில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

2013 ஏப்ரல் 10]

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நெமிலியம் ஒன்றியம், முருங்கை ஊராட்சி, முருங்கை கிராமம் மற்றும் முருங்கை காலனி மற்றும் இருளர் காலனி ஆகிய மூன்று குடியிருப்புகளை உள்ளடக்கியது. முருங்கை கிராமத்தில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் முருங்கை காலனியிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம், இருளர் காலனியில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் ஆகிய மூன்று மின்விசைத் திட்டங்கள்மூலமாக 1,710 மக்கள்தொகை கொண்ட இவ்வூராட்சிக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் மொத்தம் 68,400 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. முருங்கை கிராமத்திலுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பழுதடைந்துள்ள நிலையில், இதற்குப் பதிலாக 60,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கிற அரசியல் தலைவர்களுக்கு மத்தியிலே, திட்டங்களுக்காக மக்களல்ல, மக்களுக்காக திட்டங்கள் என்ற தாரக மந்திரத்தைத் தந்து, சென்னை மாநகர மக்களுக்கு தட்டுப்பாடில்லாத குடிநீர் கிடைத்திட கடல் நீரையும் நன்னீராக்கி, தினந்தோறும் குடிநீர் வழங்கி, வரலாற்றுச் சாதனை படைத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் புனித பொற்பாதம் வணங்குகின்றேன். எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட முருங்கை கிராமத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் 500 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே 1987 ஆம் ஆண்டு 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. நடுநிலைப் பள்ளி*

வளாகத்திற்குள்ளே உள்ள அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து, அபாயகரமான நிலையிலே இருக்கின்றது. அதனால், நீர் ஏற்றுவதற்கு மிகவும் அச்சமாக உள்ளது. பொதுமக்களும் மிகவும் அச்சத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலே 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை தெரிவித்திருக்கிறார்கள். 1987 ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த மக்கள்தொகைக்கேற்ப 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டிருந்தாலும், இன்றைக்கு மக்கள் தொகை பெருகியிருக்கிறது.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சு. ரவி: அந்தப் பகுதியில் கால்நடைகளை அதிகமாக வளர்க்கின்ற காரணத்தினாலே, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்காக இந்தக் குடிநீர்த் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியபொழுது, அங்கு கால்நடைகள் அதிகமாக உள்ளன என்றும், இந்தக் குடிநீரையே கால்நடைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறினார். அது மகிழ்ச்சியான விஷயம்தான். இருந்தாலுங்கூட, ஏற்கெனவே இருக்கின்ற 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், உடனடியாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுவதற்காக 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வருகின்ற செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திற்குள்ளாக அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும் என்பதை

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்துள்ள அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் பதில், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப்படும் என்ற ஒரு நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான ஒரு செய்தி. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுக்கு குடிதண்ணீரை முழுமையாகக் கொடுக்க வேண்டுமென்கின்ற தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்பட்டு வருகின்றார்கள். கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளில், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ஒன்று. கிட்டத்தட்ட 1,795 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொண்டு வரப்படுகின்ற அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான அரக்கோணம் நகராட்சிக்கும் தண்ணீர் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட திங்கள் சந்தை பேரூராட்சிப் பகுதியிலே சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. குழித்துறை ஆறு கூட்டுக்*

குடிநீர்த் திட்டத்தின் வாயிலாகத்தான் தண்ணீரைச் சேகரித்து, மக்களுக்கு விநியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். குழித்துறை ஆறு, திங்கள் சந்தை பேரூராட்சியிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பல பஞ்சாயத்துகளைத் தாண்டி வருகின்றபோது, தண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே அதிக தண்ணீர் கிடைப்பதற்கு வசதியாக, சுமார் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டினால், அந்தப் பகுதி மக்கள் தண்ணீரைத் தேக்கி, சேமித்து வைப்பார்கள். மக்களுக்குத் தேவையான நேரத்தில் விநியோகிக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது ஏற்கெனவே வரையறுக்கப்பட்டு, எந்தெந்த இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், புதியதாக 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டி, தண்ணீரைச் சேமிக்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அப்படி சேமிக்கின்ற அளவுக்கு தண்ணீர் வருகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டமாக அது இருக்காது. வருகின்ற தண்ணீரை முறையாகப் பகிர்ந்து கொடுப்பதற்குத்தான் முடியும். மக்கள் பெருக்கம் அதிகமாக வளர்ந்து வருகின்ற காரணத்தினால், ஏற்கெனவே இருக்கின்ற, பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்வாயிலாக போதுமான குடிதண்ணீர் கிடைக்காத பகுதிகளை ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளுக்குக் கூடுதலான குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக புதிய, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதிகளை ஆய்வு செய்து, புதியதாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவருகின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர்

2013 ஏப்ரல் 10]

அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தில் 2001 ஆம் ஆண்டு அடிப்படையில்தான் மக்கள் தொகை எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சிப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் மக்கள் தொகை கூடுதலாகி இருக்கிறது. எனவே, பழைய மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படையில் மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டுகிற நேரத்தில் மிகப் பெரிய இடர்பாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, சிவகங்கை தொகுதியில் கல்லல் ஓர் ஒன்றிய தலைநகர் ஆகும். கல்லலில் மக்கள் தொகை எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கிறது. எனவே, அரசு அதிகாரிகளிடம் கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகள் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் பழைய கணக்கை எடுத்து வைத்துக்கொண்டு, போதும் என்று சொல்கிறார்கள். இது யதார்த்தத்திற்குப் புறம்பாக இருக்கிறது. எனவே, வளர்ந்துவரக்கூடிய பேரூராட்சிகளில், மிகப் பெரிய ஊராட்சிகளில், மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டிருக்கிற ஊராட்சிகளில், தனியாகக் கணக்கு எடுத்து, கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். காரணம், 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குடிநீர் வழங்க வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்களே போதுமானது. இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வோர் ஆண்டும், கிட்டத்தட்ட 20 இலட்சம், 40 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களைக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அந்தந்தப் பகுதியினுடைய தேவைகளை அறிந்து, ஆங்காங்கே இருக்கின்ற நீர் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, தனி மின்விசையின் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, தற்போது உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படிதான் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

பட்டுப் புழு வளர்ப்பு மையம்

***23932—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) சங்ககிரி தொகுதியில், பட்டு விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை செய்ய ஏதுவாக, இளம் பருவ பட்டுப் புழுக்களை வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் இளம் புழு வளர்ப்பு மையங்களைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.